**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்**

**க. பொ. த. (சா/த)ப் பரீட்சை - 2017**

**இரண்டாம் தவணை**

**கத்தோலிக்க திருமறை**

| சுட்டெண் :- ........................................ | **தரம் : - 11** | **நேரம் :- 3. 00 மணித்தியாலம்** |
|---|---|---|

## பகுதி - I

❖ **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

(01) “ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகிறது என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கிறது…” என்ற பாடலைப் பாடியவர்
(1) எலிசபெத் (2) செக்கரியா (3) மரியாள் (4) சிமியோன்

(02) “உன் தந்தையை முழு மனதுடன் மதித்து நட உன் …………………… மறவாதே” எனும் இறைவார்த்தையைப் பூர்த்தி செய்க.
(1) தந்தையின் கடின உழைப்பை
(2) பெரியோரின் செயல்களை
(3) பெற்றோரின் அன்பை
(4) தாயின் பேறுகால வேதனையை

(03) “இறக்க நேர்ந்தாலும் எனது இறைவாழ்வை இழந்துவிட மாட்டேன்” என்ற கூற்றுடன் தொடர்புடையவர் யார்?
(1) தூய அக்னஸ்
(2) தூய மரிய கொறற்றி
(3) தூய தெரேசாள்
(4) தூய மரியாள்

(04) இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கையைப் பற்றி கூறும் நூல் எது?
(1) தொடக்கநூல் (2) விடுதலைப்பயணம் (3) உரோமையர் (4) தருப்பாடல்

(05) ஆதாம் ஏவாளின் கதை பற்றிக் கூறும் நூல் எது?
(1) விடுதலைப்பயணம் (2) இணைச்சட்டம் (3) திருப்பாடல் (4) தொடக்கநூல்

(06) தோரா என்பதன் பொருள் அல்லாதது
(1) திருச்சட்டம்
(2) நீதிச்சட்டம்
(3) மோசேயின் சட்டம்
(4) இணைச்சட்டம்

(07) ஐந்நூலில் காணப்படும் விடயங்கள் எமக்குத் தருவது
(1) இறைவிருப்பம் (2) இறைசெய்தி (3) இறைமகிமை (4) மனித வீழ்ச்சி

(08) புதிய ஏற்பாட்டின் பிரிவுகள்
(1) வரலாற்று நூல், பவுலின் திருமுகம், பொதுத்திருமுகம்
(2) வரலாற்றுநூல், பவுலின் திருமுகம், வெளிப்பாட்டு இலக்கியம்
(3) பவுலின் திருமுகம், பொதுத் திருமுகம், வெளிப்பாட்டு இலக்கியம்
(4) வரலாற்று நூல், திருமுகங்கள், வெளிப்பாட்டு இலக்கியம்

❖ (A) - உரோமையர் பிலிப்பியர்

(B) - எபேசியர், கொலோசேயர்

(C) - 1 தீமோத்தேயு, தீத்து

(D) - பிலிப்பியர், பிலமோன்

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து 09 – 12 வரையான வினாக்களுக்கு விடை தருக.

The National e-learning Portal for The General Education

(09) பவுலின் அறிவுரையைக் கொண்டு சீடர்களால் எழுதப்பட்டவை

(1) A (2) B (3) C (4) D

(10) பவுல் தன் கைப்பட எழுதியவை

(1) AB (2) BC (3) AD (4) BD

(11) பவுலின் பெயரைக் கொண்டு வேறு நபர்களால் எழுதப்பட்டது

(1) A (2) B (3) C (4) D

(12) பவுல் சிறையில் இருக்கும் போது எழுதிய மடல்கள்

(1) A (2) B (3) C (4) D

(13) புனித பவுல் கைப்பட எழுதிய திருமுகங்கள்

(1) 6 (2) 13 (3) 7 (4) 5

(14) ஞானம் என்பதன் எபிரேயச் சொல்

(1) ஹோக்மா (2) பரமஸ் (3) பராக்கிளமோஸ் (4) தெயோப்ஸ்

(15) குடும்ப மற்றும் கோத்திர ஞானம் பற்றி கூறும் நூல்

(1) சீராக்கின் ஞானம் (2) சாலமோனின் ஞானம்
(3) யோபு (4) திருப்பாடல்கள்

(16) மூன்றாம் முறையும் இயேசுவை தெரியாது என பேதுரு மறுதலித்த போது

(1) இயேசு கவலைப்பட்டார் (2) பேதுரு அழுதார்
(3) இயேசு அவரைத் திரும்பிப் பார்த்தார் (4) பேதுரு இயேசுவைப் பார்க்கவில்லை

(17) வெற்றியைக் குறிக்கும் நிறக் குறியீடு

(1) சிவப்பு (2) வெள்ளை (3) மஞ்சள் (4) வெளிறிய நிறம்

(18) “என் ஆண்டவரே என் தேவனே” இக்கூற்றுக்குரிய இயேசுவின் சீடர்

(1) அந்திரேயா (2) யூதாஸ் (3) தோமா (4) யூதா

(19) இயேசுவின் இறந்த உடலை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்ய முன் வந்தவர்

(1) பேதுரு (2) மரியன்னை
(3) யோவான் (4) அர்மத்தியா ஊர் யோசேப்பு

(20) இயேசு யூதரால் கைது செய்யப்பட்டு முதலில் அழைத்துச் செல்லப்பட்டது

(1) பிலாத்துவிடம் (2) ஏரோதுவிடம்
(3) தலைமைக்குருவிடம் (4) பரிசேயரிடம்

(21) கூற்று : இறைவன் உலகத்தை ஆளும் அதிகாரத்தை மனிதனிடம் கொடுத்தார்.
காரணம் : படைப்பின் சிகரமாக மனிதன் படைக்கப்பட்டுள்ளான்.
மேற்கூறியவற்றில்,

(1) கூற்று சரி காரணம் பிழை (2) கூற்றும் காரணமும் சரி
(3) கூற்று பிழை காரணம் சரி (4) கூற்றும் காரணமும் பிழை

(22) புகழ்ச்சியும் வேண்டுதலும் உள்ளடங்கிய செபம்

(1) இயேசுவின் வேண்டல் (2) திருப்புகழ்மாலை
(3) மூவேளைச் செபம் (4) கிறிஸ்து கற்பித்த செபம்

(23) “இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்” இவ்வாறு கூறி இறை அழைப்பை ஏற்றுக் கொண்ட இறைவாக்கினர்

(1) எரேமியா (2) நாத்தான் (3) எசாயா (4) தானியேல்

(24) இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட சுதேச துறவற சபைகள்

(1) பிரான்சிஸ்கன் சபை
(2) புனிததூதர் கன்னியர்சபை
(3) இயேசு சபை
(4) டிலாசால் அருட்சகோதரர்கள்

(25) அல்பா, ஒமேக்கா என்பதன் கருத்து

(1) நடுநிலை, தன்னலம்
(2) ஆரம்பம், தொடக்கம்
(3) தொடக்கமும் முடிவும்
(4) இறுதி, நடுநிலை

(26) தூய பவுல் முதலாவது தூதுரைப்பயணம் ஆரம்பித்த ஆண்டு

(1) கி.பி 47ம் ஆண்டில்
(2) கி.பி 48ம் ஆண்டில்
(3) கி.பி 49ம் ஆண்டில்
(4) கி.பி 50ம் ஆண்டில்

(27) வாழ்க்கையின் அர்த்தம் சிக்கல்கள் தீர்வுகள் பற்றிய எண்ணக்கருக்கள் உள்ள நூல்

(1) திருவெளிப்பாடு
(2) சங்கீதங்கள்
(3) யோபு
(4) நீதிமொழிகள்

(28) திருத்தூதர்பணி எழுதப்பட்ட இடமாக கருதப்படுவது

(1) எதென்ஸ்
(2) பிலிப்பி
(3) கலாத்தியர்
(4) ஆகாயா

(29) சீனாய் உடன்படிக்கை வழியாக இஸ்ரயேலர் இறைமக்களானது போல

(1) இறைமக்கள் எல்லோரும் இறைவனுடன் உடன்படிக்கை செய்ய வேண்டும்
(2) நாமும் இறைவனுடன் வாக்குறுதியை நிறைவேற்றி இறைவனின் பிள்ளைகளாக வேண்டும்
(3) இறைசித்தத்தை உடன்படிக்கைகள் மூலமாக நிறைவேற்றுபவர்களாகின்றோம்
(4) நாமும் திருமுழுக்கின் மூலம் இறைவன் செய்து கொள்ளும் உடன்படிக்கை வழியாக இறை பிள்ளைகளாகின்றோம்

(30) திருமுழுக்கு யோவானின் போதனையிலிருந்து தாய்த்திருச்சபை மூலம் எமக்குத் தரப்பட்ட பொறுப்பு

(1) இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்
(2) திருமுழுக்குக் கொடுத்து மக்களை ஆயத்தப்படுத்த வேண்டும்
(3) நீதிக்காக குரல் கொடுக்க வேண்டும்
(4) புதிய சமுகத்தைக் கட்டியெழுப்ப முற்பட வேண்டும்

(31) யோர்தான் ஆற்றில் பெற்ற சிறப்பான அனுபவத்தின் பின் இயேசு சென்றது

(1) தொழுகைக்கூடத்திற்கு
(2) எருசலேம் ஆலயத்திற்கு
(3) ஆற்றங்கரைக்கு
(4) பாலைநிலத்திற்கு

(32) மனித அவதாரம் கொண்ட இயேசு தமது பணியின் ஆரம்பத்தில்

(1) தாய் மரியாவின் வேண்டுதலுக்கு ஏற்ப புதுமை செய்தார்
(2) அலகையின் சோதனைக்கு முகம் கொடுத்தார்
(3) தொழுகைக்கூடத்திற்கு சென்று எசாயாவின் ஏட்டுச்சுருள் வாசித்தார்
(4) மலைப்பொழிவுப் போதனையை நிகழ்த்தினார்

(33) ஞாயிறு தினத்தை தூய்மையாக அனுசரிக்க முதலில் செய்ய வேண்டியது

(1) ஏழைகளுக்கு தானதருமம் செய்வதாகும்
(2) சிறையிலிருப்போரைத் தரிசிப்பதாகும்
(3) மறைக்கல்வி வகுப்புக்களில் பங்கேற்பதாகும்
(4) ஞாயிறு திருப்பலியில் பங்கேற்பதாகும்

(34) புகழை விரும்பி செயற்படக்கூடாது என்ற செய்தியைப் பெற்றுக்கொள்வது
(1) இயேசுவின் முதலாவது சோதனையில்
(2) இயேசுவின் இரண்டாவது சோதனையில்
(3) இயேசுவின் மூன்றாவது சோதனையில்
(4) இயேசுவின் மூன்று சோதனைகளிலும்

(35) தபோதனர் எனப்படுவோர்
(1) பாலைநிலத்தில் தனியாக வாழ்ந்தோர்
(2) சாக்கடலில் அயற்பிரதேசத்தில் துறவை மேற்கொண்டோர்
(3) தத்தம் வீடுகளில் மணத்துறவைப் பின்பற்றியோர்
(4) துறவற மடங்களில் துறவற வாழ்வை வாழ்ந்தோர்

(36) குருத்துவத்தின் நிறைவு
(1) சீடத்துவம்
(2) அப்போஸ்தலிக்கம்
(3) ஆயத்துவம்
(4) திரித்துவம்

(37) குருத்துவம் சாராத துறவிகளில் பொருத்தமற்றோர்
(1) மாறிஸ் சகோதரர் சபை
(2) அன்புச் சகோதரர் சபை
(3) தூய பப்ரிஸ் டிலால் சகோதரர் சபை
(4) அமலமரித் தியாகிகள் சபை

(38) திருமுழுக்கில் கிறிஸ்மா தைலம் பூசப்படுகின்றது. இவ்விதம் திருத்தைலம் பூசப்படுவதன் காரணம்
(1) திடப்படுத்தலின் அடையாளமாகும்
(2) இறைமக்களாகும் அடையாளம்
(3) திருச்சபையின் அங்கத்தவராகும் அடையாளம்
(4) இயேசுவின் சாட்சியின் அடையாளம்

(39) ஒப்புரவு அருளடையாளத்தில் "கருச்சிதைவு" என்னும் பாவத்திற்கு குருவானவர் மன்னிப்புப் பெறுவதற்கு அனுமதி பெற வேண்டியது
(1) ஆயரிடம்
(2) திருத்தந்தையிடம்
(3) குருமுதல்வரிடம்
(4) மறைக்கோட்ட முதல்வரிடம்

(40) மனத்துயர் வழிபாட்டில் உள்ளடங்காதது
(1) மனத்துயர் மன்றாட்டு
(2) இறைவார்த்தை வழிபாடு
(3) கிறிஸ்துமையப் பிராத்தனை
(4) ஆசிர் நீர் தெளித்தல்

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**(01)** (i) இயேசு போதித்தவற்றிலும் செய்தவற்றிலும் எழுத்து வடிவம் பெறாத விடயங்கள் அதிகளவு உண்டு. அவற்றை திருச்சபை எவ்வாறு அழைக்கின்றது?

(ii) வெளிப்பாட்டு இலக்கியத்தில் வரும் இரண்டு அடையாளங்கள்

(iii) கத்தோலிக்க திருமணத்தின் பண்புகள் இரண்டும் எவை?

(iv) நற்கருணையின் முன்னடையாளங்கள் இரண்டு தருக.

(v) எழுத்துவடிவம் பெறாத இறைவாக்கினரின் பண்புகள் இரண்டு தருக.

(vi) மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட காலமும் இடமும்?

(vii) திருமுழுக்கு யோவானின் பிறப்பின் விசேட தன்மை யாது?

(viii) துறவற வாழ்வின் பண்புகள் எவை?

(ix) இறைவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையின் அடையாளம் யாது?

(x) வெளிப்பாட்டு இலக்கியத்தில் அடங்கும் நூல்கள் எவை?

(10 x 2 = 20 புள்ளிகள்)

**(02)** (i) மலைப்பொழிவில் காணப்படும் படிப்பினைகள் 2 தருக.

(ii) புதுமைகளை வகைப்படுத்துக.

(iii) இலங்கையின் ஒழுக்க விழுமியங்களில் பிரதிபலிக்கும் இறையாட்சியின் மதிப்பீடுகள் ஐந்து தருக.

(2 + 3 + 5 =10 புள்ளிகள்)

**(03)** (i) ஐந்நூல்களும் எவை?

(ii) யாவே மரபுக்குரிய கதைகள் 3 எவை?

(iii) ஐந்நூலை கற்பதால் மாணவராகிய நீர் அடையும் பயன்கள் எவை?

(2 + 3 + 5 =10 புள்ளிகள்)

**(04)** (i) திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் பொருட்களையும் அதன் அர்த்தத்தையும் தருக.

(ii) உறுதிப்பூசுதல் பெறத் தேவையான தகுதிகள் 3 தருக.

(iii) பங்குக் குருவானவரால் ஆற்றப்படும் பணிகள் ஐந்து எழுதுக.

(2 + 3 + 5 =10 புள்ளிகள்)

**(05)** (i) முதலாவது தூதுரைப் பயணத்தில் பவுலுடன் சென்றவர்கள் யார்?

(ii) முதலாவது பயணத்தில் அவர் சென்ற இடங்களை ஒழுங்கு முறையாகத் தருக.

(iii) தூய பவுலிடம் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள் 5 தருக.

(2 +3 + 5 =10 புள்ளிகள்)

**(06)** (i) நான்கு நற்செய்திகளையும் தருக.

(ii) நற்செய்தி நூல்கள் எழுதப்பட்ட நோக்கங்களைக் குறிப்பிடுக.

(iii) கிறிஸ்தவ மாணவராகிய நீர் உமது வாழ்வில் நற்செய்தியைப் பரப்ப வேண்டிய சந்தர்ப்பங்கள் 5 தருக.

(2 + 3 + 5 =10 புள்ளிகள்)

**(07)** பின்வரும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(i) புனித யோசேவ்வாஸ் அடிகள்

(ii) திருத்தந்தை 1ம் பிரான்சிஸ்

(iii) நோயிற்பூசுதல் அருளடையாளம்

(iv) திருமுகங்கள்

(v) சீனாய் உடன்படிக்கை

(2 x 5 =10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education